www.newwisdomministries.com

# ஞானஒலி






ஞானம் 7 - ஒலி 1 - 07.01.2024

# எல்லா உயிரும் உயிரே





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவில் எனக்குப் பிரியமான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்பே அனைத்து உயிர்களின் உயிர் மூச்சாகும். அன்பினால்தான் உயிர்கள் வாழுகின்றன. உயிரால்தான் அனைத்து படைப்புகளும் வாழ்கின்றன. எனவே உயிரைவிட அன்பே மிக உயர்ந்தது. அதைத்தான 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் 13ம் வசனம் இறுதியாக உறுதி செய்கிறது. அன்பே தலை சிறந்தது என்று உலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

அதனால்தான் ஒவ்வொரு உயிரும் மற்ற உயிர்களோடு இணைந்து வாழவும், ஓர் உயிர் மற்ற உயிர்களுக்கு நன்மை செய்யவும் அதனால் நீடூழி வாழவும் படைக்கப்பட்டிருக்கின்றது என்ற படைப்பின் இரகசித்தையும், நோக்கத்தையும் அறிந்து கொள்வதே உயிரின் முதல் பாடமாகும்.

எபேசியர் 4ம் அதிகாரம் 32ம் திருவசனம், ஒருவருக்கொருவர் நன்மை செய்து, பரிவு காட்டுங்கள் என்று கூறுகின்றது.

மற்றும் கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும் என்று பிலிப்பியர் அதிகாரம் 4, 5ம் வசனம் இவ்வாறு கூறுகின்றது. அதோடு அந்த கனிந்த உள்ளம் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை பிலிப்பியர் 4ம் அதிகாரம் 8 மற்றும் 9 வசனங்கள் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

இந்த வசனங்கள் நம் வாழ்வின் ஆணிவேர்களுக்கு ஊட்டச் சத்தாக அமைந்துள்ளது.

அன்புடையோர் எல்லாமுடையார் என்று நமது முன்னோர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

தன்னை அன்பு செய்வது, இயல்பான ஒன்று. அது உயிர் பிழைப்பதற்கான அனிச்சை செயல். அடுத்தாக, தான் விரும்பும், தன்னை அன்பு செய்கின்றவர்களை அன்பு செய்வது, தனது மகிழ்ச்சியின் வெளிப்பாடு. அந்த சக மனித அன்பின் உறவு, தனக்குச் சாதகமாக இருக்கும் வரையில், அந்த அன்புறவு தொடரும், ஏதாவதொரு தருணத்தில், அந்த உறவு கசப்படையும்போது, அதன் ஆயுள்

அவ்வளவுதான். அடுத்தாக, பிறருக்காக, பிறரின் நலனுக்காக, அன்பு செய்வது, சிலுவைப்பாடுகள் நிறைந்தது. அது தியாகத்தின் மீது கட்டப்பட்ட தானே விரும்பி ஏற்றுக்கொண்ட அன்பான வாழ்க்கை. அது மிக உயர்ந்த அன்பு வாழ்க்கை. அதைத் தாயன்பு, தந்தையன்பு, சகோதர அன்பு, நட்பு என்றும் அழைக்கின்றோம்.

இவற்றை எல்லாம் கடந்து வாடும் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரைப்போல, எல்லா உயிர்களிடத்தும் உயிராய் இருக்கும் அன்பு பேரன்பாகும். அத்தகைய அன்பு யாரென்றுகூட பாராமல், என் கடமை பணி செய்து கிடப்பதே என்பதுபோல, எந்தவித வித்தியாசமின்றி அனைத்தையும் அன்பு செய்வார்கள். அதுவே தெய்வீக அன்பு. குளிரில் வாடும் மயிலுக்குப் போர்வையை அளித்தது, முல்லைக்குத் தேரைக் கொடுத்தது, கர்ணனை, துரியோதனன் ஏற்று அரச மரியாதையை அளித்தது, இயேசு நல்ல கள்வனை மன்னித்துத் தன்னோடு விண்ணகம் எடுத்துச் சென்றதும் இவ்வகையைச் சார்ந்ததுதான்.


அப்படிப்பட்ட ஒருவரைப்பற்றித்தான் உங்களோடு பகிர்ந்துகொள்கின்றேன். அவர் ஒரு விவசாயி. வயதானவர். அவருக்கு குருவிக்கூடுத் தாத்தா என்று பட்டப்பெயர் உண்டு. அந்தக் கிராம மக்கள், சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அவரை குருவிக்கூடுத் தாத்தா என்றுதான் அழைப்பார்கள். அவருக்கு அந்தப் பெயர் வந்ததற்கு ஒரு காரணம் உண்டு.

அவர் பெரிய நிலச்சுவான்தார். அவர் வயல்களில் நெல் பயிரிட்டிருந்தார். பல ஏக்கர் பரப்புள்ள வயல்களில் நெல் அமோகமாக விளைந்திருந்தது. அவர் தினமும் காலையிலும், மாலையிலும் அந்த வயல்வெளி முழுவதும் சுற்றிவருவார். அறுவடைக்காலம் வந்ததும். பணியாளர்கள், அறுவடையை ஆரம்பிக்கலாமா? என்று கேட்டார்கள். ஆனால், அவர், வேண்டாம் கொஞ்ச நாள் போகட்டும் என்று சொன்னார். அனைவருக்கும் ஆச்சரியம், ஐயா, இப்ப அறுவடை செய்யலனா, நெல்லெல்லாம் உதிர்த்து வீணாப்போயிடும் என்று சொன்னார்கள. ஆனால், அவர், பரவாயில்ல, கொஞ்ச நாள் பொறுத்து அறுவடை செய்யலாம் என்று சொன்னதோடு, ஒரு மாதம் கழித்து, இப்ப அறுவடைய ஆரம்பிங்க என்று சொன்னார். அந்த கிராம மக்கள் அனைவரும், இவருக்கென்ன புத்தி பேதலுச்சுப்போச்சா? அறுவடையத் தள்ளிப்போட்டு, எல்லாப் பயிரும் வீணாப்போச்சே...உழச்சதுக்கேற்ற விளைச்சல் கிடைக்காமப்போச்சே என்று புலம்பினார்கள். சரி அவர் நிலம், நஷ்டத்தப்பத்தி அவரே கவலப்படல, என்று அனைவரும் சமாதானம் அடைந்தார்கள். இருந்தாலும், ஒரு வயதானவர் அவரிடம், ஏன்யா, அறுவடையத் தள்ளிப்போட்டு, விளைச்சல வீணாக்கினீங்க என்று கேட்டார். அதற்கு அந்தக் குருவிக்கூடுத் தாத்தா சொன்னார். நான் தினமும் நம்ம வயல்களை சுற்றுப் பாத்துட்டு வரும்போது, ஒரு வயல் நடுவே, ஒரு சிட்டுக்குருவி கூடுகட்டி, நாலு குஞ்சு பொறிச்சிருந்தது. அந்த குஞ்சுகளெல்லாம் வளர்றவரைக்கும் அறுவடையத் தள்ளிப்போட்டேன் என்று சொன்னார். அதற்கு அந்தப் பெரியவர், சரிங்க ஐயா, அந்த ஒரு வயல மட்டும் விட்டுட்டு, மற்ற வயல்கள்ல அறுவடைய செஞ்சிருக்கலாம்ல என்று கேட்டபோது...குருவிக்கூடு தாத்தா சொன்னாரு, அந்த வயல விட்டுட்டு, மற்ற வயல்கள்ல, நூற்றுக் கணக்காக நாம அறுவடை என்ற பெயர்ல, பெரிய சலசலப்பும், சத்தமும் ஏற்பட்டு, அதப்பாத்து அந்த குருவிகள் பயந்து செத்துப்போகும். என் பயிர் அழிஞ்சாலும் பரவால்ல, ஆனா, நம்பிக்கையோடு என் வயல்ல, தன் கூடு கட்டி, குஞ்சி பொறிச்சி, நிச்சயமா இங்கு தன் குடும்பத்துக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கின்ற அந்தக் குருவிகள காப்பாத்துறதான் எனக்கு முக்கியம். அந்தக் குருவி எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யமாட்டேன். எல்லா உயிர்களும் வாழ்வதற்கு உரிமை உண்டு என்றாராம். அப்படிப்பட்ட குருக்கூடு தாத்தா இவ்வுலகின் பேருயிராகும். வாழ்க.

122



# விவிலியம் அறிவோம்



## இணைச் சட்டம் 24

இச 24:1-5 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் திருமணச் சட்டங்களைப் பற்றி, குறிப்பாக மணவிலக்குபற்றிப் பேசுகின்றன. ஒருவன் தனது மனைவியின் செயல்களால் தூண்டப்பட்டு அவள்மீதுவிருப்பம் இல்லாமல் போனால் முறிவுச்சீட்டு எழுதி அவளை விலக்கலாம் என விவிலியம் கூறுகிறது. முறிவுச் சீட்டு கொடுப்பதற்குத் தெளிவான காரணங்கள் வேண்டும். மண விலக்கிற்கான முறிவுச் சீட்டில் அந்தக் காரணங்கள் பதிவு செய்யப்படவேண்டும். மூப்பர்களால் அந்த முறிவுச் சீட்டு ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும். ஒருவன் மணவிலக்கு செய்ததன் மனைவி, வேறு ஒருவனுக்கு மனைவியாகியபின் மீண்டும் அவளைத் திருமணம் செய்யமுடியாது. இச்சட்டத்தின் அடிப்படை நோக்கம் என்னவென்று தெரியவில்லை; ஆனால் திருமணம், மணவிலக்கு மற்றும் விபச்சாரம் ஆகியவற்றின் மரபு மற்றும் சட்ட எல்லைகளைக் காப்பதாக அமையலாம். முறிவுச் சீட்டுபெற்ற பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்; அவள் விபச்சாரி எனக் கருதப்பட முடியாது. ஆனால் மறுமணம் செய்துகொண்ட பெண் மீண்டும் முதல் கணவனை திருமணம் செய்யமுடியாது. அப்படிச் செய்வது விபச்சாரமாகக் கருதப்படலாம். இறைவாக்கினர் எரோமியா இக்கருத்தை வழிதவறிச் சென்ற இஸ்ரயேருக்கு உருவகமாகக் கூறுகிறார் (எரே 3:1-5).

புதிதாக திருமணம் ஆனவனுக்கு போருக்குச் செல்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவது ஏற்கனவே இச 20:5-8 வரையுள்ள பகுதியில் வருகிறது. சாதாரணமான உடலின் செயல்பாடுகளும், விருப்பத்துடன் செய்யப்படும் பாலியல் செயல்களும் பல வழிகளில் ஒருவரைத் தீட்டாக்கலாம். மேலும் பண்டைய காலங்களில் புதிதாகத் திருமணம் ஆனவர்களுக்கு ஏற்படுகின்ற அபாயங்களும், திருமணம்ஆன முதல் இரவிலேயே கொல்லப்படுவதும் போன்ற கதைகள் குறிப்பிடத்தக்கவை

(தோபி 3:7-9; 8:1-21). ஆனால் நேர்மறையாக இணைச் சட்டம் புதிதாகத் திருமணம் ஆனவர்கள் மட்டில் கருணை காட்டுகிறது எனலாம். போருக்குச் செல்வதிலிருந்து ஒரு வருடத்திற்கு விலக்கு பெறுவது தம்பதியர் உறவில் வளரவும் குழந்தை பெற்றுக் கொள்ளவும், ஒரு குடும்பத்தை உருவாக்கவும் வாய்ப்பளிக்கிறது. இச்சட்டத்தைப் பொறுத்தவரையில் மனைவியை மகிழ்விப்பதும் ஒரு முக்கிய காரணமாகக் கொடுக்கப்படுகிறது. மேலும் இராணுவத்தில் சேர்வதென்பது போருக்குச் செல்வதைக் குறிக்கிறது. போரில் ஒருவர் இறப்பைச் சந்திக்கலாம். இதனால் அவருடைய மனைவி கைம்பெண் ஆகலாம்; குழந்தைகள் அநாதைகள் ஆகலாம். இவற்றைத் தவிர்க்க உதவுகின்ற ஒரு மனிதநேயச் சட்டமாக இச்சட்டத்தைப் பார்க்கலாம்.

இச 24:6, 10-13 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் அடகு வாங்குவதைப்பற்றிப் பேசுகின்றன. பண்டைய மேற்காசிய நாடுகளில் அடகு வைப்பதும் அடகு வாங்குவதும் வழக்கத்தில் இருந்தது. ஒருவர்தான் பெறவிரும்புகின்ற கடனுக்கு ஈடாகப் பொருள்களையோ, நிலத்தையோ, அல்லது நிலத்தில் விளையும் பொருள்களையோ அடகாக வைப்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. இணைச் சட்ட விதிகள் அடகு வாங்குவது அடகு வைப்பவரின் தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதாக அமையக்கூடாது எனக் கூறுகிறது. உதாரணமாக, மாவரைக்கும் கல்லின் கீழ்க்கல்லையாவது மேற்கல்லையாவது அடகாக வாங்காதே எனக் கூறப்பட்டுள்ளது. மாவரைக்கும் கல் இரண்டு கற்களால் உருவாக்கப்படுகிறது. கீழ்க்கல் கனமானதாக, தட்டையானதாக அல்லது வளைவானதாக அமைந்திருக்கும். அதில் அரைப்பதற்கான தானியங்கள் போடப்படும். மேற்கல் தானியங்களை அரைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கல். அதுகனம் குறைந்ததாக, கைகளால் பயன்படுத்துவதற்கு வசதியானதாக அமைந்திருக்கும். பண்டைய உலகில் ஏழைகள் ஒவ்வொரு நாளுக்கும் தேவையான பதப்படுத்தப்பட்ட தானியங்களை வாங்கித் தேவையான அப்பங்களைச் செய்வது முடியாத ஒன்றாக இருந்தது. எனவே ஒவ்வொரு நாளுக்கும் தேவையான அப்பங்களைச் செய்வதற்கு மாவரைப்பது அவர்களுக்குத் தேவைப்பட்டது. இந்தச் சூழலில் மாவரைக்கும் கல்லை அடகாக வாங்குவது அந்தக் குடும்பத்தின் வாழ்வுக்கு இடையூறு செய்வதாக அமையலாம். உருவக முறையில் மாவரைப் பதைத்தடுப்பது அவர்கள் வாழ்வையே பாழாக்குவதாகும் (எரே 25:10; திவெ 18:21-22).

மேலும் பொருள்களை அடகு வாங்குவது அவற்றின் உரிமையாளரின் அவசியத் தேவைகளை மறுப்பதாக அமையக்கூடாது எனவும் வலியுறுத்தப்படுகிறது. உதாரணமாக, கடன் கொடுப்பவர் அடகுப் பொருளை எடுப்பதற்காக வீட்டிற்குள் நுழையக்கூடாது எனக் கூறப்படுகிறது. வீட்டிற்குள் நுழையாமல் வெளியே நிற்பது கடன் வாங்குபவர் கொடுக்கின்ற அடகுக்கான பொருள் அவரது

கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதைக் காட்டுவதாக உள்ளது. கடனுக்கு ஈடாகப் பெற்ற மேலாடையைத் திருப்பிக் கொடுப்பது இரக்கத்தின் வெளிப்பாடாக இருக்கலாம் அல்லது சட்டத்திற்கு மதிப்பு கொடுப்பதாக இருக்கலாம், அது ஏழைகளின் உணர்வுகளை மதிப்பதாகவும் அமைகிறது (24:17). உடைகள் தனிப்பட்ட உரிமை. செல்வந்தர்களைப்போல் ஏழைகள் பல மேலாடைகளை வைத்திருப்பதில்லை; எனவே அன்றாட பயன்பாட்டிற்கு மேலாடை தேவைப்படலாம். மேலும் உடைகள் ஒருவருடைய சமூக அந்தஸ்தையும் வெளிப்படுத்தகிறது. உடைகளை அடகாகப் பெற்றுவைத்திருப்பது அவர்களின் சமூக அந்தஸ்தைக் குலைப்பதாகவும் அமையலாம்.

இச 24:7 பண்டைய மேற்காசிய நாடுகளில் ஒருவனைக் கடத்தி அவனை அடிமையாக விற்பது மரணதண்டனைக்குரியக் குற்றமாகப் பார்க்கப்பட்டது (காண் விப 21:16) என்பதை வெளிப்படுத்துகிறது. இணைச் சட்ட விதிகளிலும் அமுராபி விதிகளிலும் இதை நாம் பார்க்கிறோம். அடிமைகளை வாங்கி விற்பவர்கள் வழி தவறிய குழந்தைகளையோ, பாதுகாப்பற்ற மனிதர்களையோ கடத்தி அடிமைகளாக விற்பதை இச்சட்டம் கட்டுப்படுத்துகிறது. பண்டைய காலத்தில் அடிமைகளாக ஆக்கப்பட்டவர்கள் குடும்பத்தினாரால் விற்கப்பட்டவர்களாகவோ, போரில் சிறை பிடிக்கப்பட்டவர்களாகவோ இருப்பர். இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் கடவுளோடு கொண்டிருக்கும் உடன்படிக்கை உறவு இத்தகையச் செயல்களைக் கண்டிக்கிறது. இதுபத்துக் கட்டளைகளுக்கு எதிரான ஒரு செயல்.

இச 24:8-9 இறைச் சொற்றொடர்கள் தொழுநோய் குறித்துப் பேசுகின்றன. லேவி 13-14 அதிகாரங்கள் தொழுநோய் குறித்து விரிவாகப் பேசுகின்றன. இஸ்ரயேல் சமூகத்தில் தோல் சம்பந்தமான அனைத்து நோய்களும் குருக்களிடம் காட்டப்பட்டு உறுதி செய்யப்படவேண்டும். தொழுநோய் தொற்றுநோய் எனக் கருதப்பட்டது; எனவே தொழுநோய் கண்டவரின் உடைகள் மற்றும் வீடு ஆகியவையும் நோயைக் கடத்தக் கூடியவையாகக் கருதப்பட்டன. தொழுநோய்; பற்றிய சிந்தனைகள் நோய்களைப் பற்றிய அறிவால் உருவானவை அல்ல மாறாக சமூக ஒழுங்கு, தீட்டு மற்றும் தீட்டற்றவை பற்றிய சட்டங்களின் அடிப்படையில் உருவானவை. கடவுளின் ஆற்றலால் மோசே தொழுநோய் கொண்டவராக மாறுகின்றார் (விப 4:6-7); கடவுளின் தீர்ப்பு மிரியத்தைத் தொழுநோயாளியாக மாற்றுகிறது (எண் 12:9-15). புதிய ஏற்பாட்டில் இயேசுவின் செயல்கள் நொழுநோய் பற்றிய பார்வைகளை மாற்றுகின்றன (மத் 10:8; மாற் 1:41).

இச 24:14-15 இறைச் சொற்றொடர்களும் ஏழைகள் மீது, அவர்கள் அன்னியராக இருந்தாலும், குடிமக்களாக இருந்தாலும், இணைச் சட்டம் கொண்டுள்ள கரிசனையைக் காட்டுகிறது அன்றாடம் வேலை செய்து உண்ணும் நிலையில்தான் பெரும்பாலான மக்கள் இருந்தார்கள். எனவே கிடைக்கின்ற கூலி அவர்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அவசியமாக இருந்தது. பண்டைய

காலத்தில் வேலை கிடைப்பது பயிர்த் தொழில் செய்கின்ற காலம், பயிர் செய்வதற்கான சூழ்நிலை, தட்பவெப்ப நிலை போன்றவற்றைச் சார்ந்தே இருந்தன. நிரந்தரமான வேலையோ கூலியோ கிடைப்பதில்லை. வேலையாள்கள் கூலியைப் பேசி வேலை செய்தார்கள். பயிர்த்தொழில், கட்டிடவேலை, ஆடு மேய்த்தல், மீன் பிடித்தல் போன்ற வேலைகள்தான் இருந்தன.எனவேதான் கூலி கொடுக்காமல் ஏழைகளுக்கு அநீதி செய்வதை இறைவாக்கினர்கள் கண்டித்துப் பேசினார்கள் (எரே 22:13; மலா 3:5). ஏழைகளும் கீழ்நிலையில் இருப்பவர்களும் சமமாகப் பார்க்கப்படவேண்டும் என்ற சிந்தனையை வெளிப்படுத்துவதாக இச்சட்டங்கள் உள்ளன. இச 24:16 தனிமனித பொறுப்பைப் பதிவுசெய்கிறது. பொதுவாக மறைநூல் பாவம், தண்டனை போன்றவற்றில் தனித்த நிலையை எடுப்பதில்லை. ஒரு குற்றத்தைத் தனி ஒருவன் செய்தாலும் அதனால் சமூகம் பாதிக்கப்படுகிறது என்பது எப்போதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. தனிமனித குற்றமும் சமூகக் குற்றமும் ஒன்றோடொன்று தொடர்டையவை. என்றாலும் தனிமனிதன் தனது குற்றத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. பிள்ளைகளுக்காகத் தந்தையரும், தந்தையருக்காகப் பிள்ளைகளும் கொல்லப்பட வேண்டாம். அவரவர் தம் பாவத்திற்காகக் கொல்லப்படட்டும் என்ற இச்சட்டம் முந்தைய சில சட்டங்களுக்கு முரணானதாகத் தெரிந்தாலும் செல்லுபடியாகின்ற சட்டமாகும்.

இச 24:17-22 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் எகிப்து நாட்டில் அவர்கள் அடிமைகளாக இருந்ததை நினைவு கூர்ந்து ஏழைகள், கைம்பெண்கள், அநாதைகளுக்கு ஆதரவாகச் செயல்படவேண்டும் எனக் கட்டளையிடுகிறது. ஏழைகள், கைம்பெண்கள், அநாதைகள் ஆகியோர் பொருளாதாரத்தில் கீழ்நிலையில் இருப்பவர்கள்; சமூகத்தில்; விளம்பு நிலைகளில் வாழ்பவர்கள். இஸ்ரயேலின் கடவுள் அவர்கள் மீது இரக்கம் கொண்டவராக இருந்தார். இஸ்ரயேல் மக்கள் இத்தகையோர்மீது இரக்கம் காட்டவேண்டும் என விரும்புகிறார். அதற்கு அவர்கள் எகிப்து நாட்டில் தங்களது நிலையை நினைவில் கொள்ளவேண்டும் என்கிறார். எகிப்தில் அவர்களின் நிலையை நினைவில் வைப்பது அவர்களின் தங்களைப் பற்றிய புரிதலுக்காகவே. எகிப்து நாட்டிலிருந்து இஸ்ரயேல் மக்கள் விடுதலை பெற்றவர்களாக வெளியே வருவதற்கு ஈடாக எதுவும் கொடுக்கவில்லை. ஆண்டவர் பார்வோனுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை; எந்த சமரசமும் செய்யவில்லை. எந்தச் செலவும் இல்லாமலே ஆண்டவர் அவர்களை மீட்கிறார். உண்மையில் அவர்கள் விடுதலை பெற்றவர்களாக வெளியே வரும்போது ஏராளமான பொருள்களுடன் வருகிறார்கள் (விப 3:22; 12:36). இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கப்படும் இறையியல் இஸ்ரயேலின் செல்வம் அனைத்து மக்களுடனும் பகிர்ந்து

கொள்ளப்படவேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டதாக உள்ளது. மேலும் அறுவடையில் கிடைக்கின்ற அபரிமிதமான தானியங்கள் கடவுளின் உடன்படிக்கை வாக்குறுதியின் பலன். எனவே கடவுளிடமிருந்து வருபவை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்ற சிந்தனை இச்சட்டங்களில் தெரிகிறது. இந்தச் சிந்தனை பல நோக்கங்களைக் கொண்டதாக உள்ளது. முதலாவதாக, ஏழைகள் மற்றும் விளிம்பு நிலைகளில் வாழும் மக்களை வாழவைப்பதில் முழுச் சமூகமும் பங்கெடுக்கிறது. இரண்டாவதாக, அறுவடை காலத்தில் ஒரு பகுதியை அறுவடை செய்யாமல் விடுவது நிலத்திற்கு ஓய்வு கொடுப்பதுடன் தொடர்புடையது (விப 23:10-11). மூன்றாவதாக, பண்டைய மேற்காசிய நாடுகளில் நிலத்தில் விடப்படுகின்ற கதிர்கள் உள்நாட்டுக் கடவுளர்களுக்கு செய்யப்படும் பலி காணிக்கைகளாகக் கருதப்பட்டன. இணைச் சட்ட ஆசிரியர் அவற்றை ஏழைகளுக்கும். சமூகத்தின் விளிம்பு நிலைகளில் வாழ்பவர்களுக்கும் கொடுப்பதன் வழியாக தவறான வழிபாட்டிற்கு ஆதரவு தருவதைத் தடுக்கிறார். அதற்கு மாறாக ஒரு இரக்கச் செயலை, மனித நேயச் செயலை உருவாக்குகிறார். எனவேதான் அறுவடை செய்யும்போது அறுவடை செய்த இடங்களில் இரண்டாவதாக அறுவடை செய்யக்கூடாது. தேவையில் இருக்கும் ஏழைகள் விடப்பட்ட கதிர்களைச் சேகரிக்கலாம். ஏழைகளுக்கு இரக்கம் காட்டும் இத்தகையச் செயல் நிலம் கடவுளுக்கு உரியது என்ற உண்மையை உரக்கக் கூறுவதாகவும் உள்ளது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ் cmf.





அருட்தந்தை.ராபர்ட்.

பங்குத் தந்தை, புனித.அடைக்கல மாதா ஆலயம், மறவபட்டி, திண்டுக்கல் மறைமாவட்டம்

# திருக்காட்சிப் பெருவிழா ஞாயிறு - 07.01.2024

## எசாயா 60/1-6, எபேசியர் 3/2, 3, 5, 6, மத்தேயு 2/1-12

## ஆண்டவரின் திருக்காட்சிபெருவிழா

இயேசு தன்னைப் புறஇனத்தவருக்கு வெளிப்படுத்திய விழா இன்று. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று பெருமை பாராட்டும் இஸ்ரேல் மக்கள் இயேசுவை அடையாளம் கண்டுகொள்ளாதபோதும் புறந்தள்ளப்பட்ட கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்த ஞானிகள் ஆண்டவரை அடையாளம் கண்டு வணங்கிச் சென்ற திருநாள். எருசலமே எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன் மேல் உதித்துள்ளது என்று ஏசாயா இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் உரைத்த வாக்குறுதி குழந்தை இயேசுவில் நிறைவேறியது. அதே இறைவாக்கு இன்று நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒலிப்பதுதான் இன்றையவிழா.

மண்ணில் மனிதன் தோன்றியதிலிருந்தே கடவுளைக் கண்டடையவேண்டும் என்ற தேடல் இருந்து வந்ததை நாம் அறிவோம். இது ஒரு தொடர் தேடலாகவே இன்றளவும் உள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ரேல் மக்களின் அழுகுரலைக் கேட்டுக் கடவுள் பல்வேறு இறைவாக்கினர்களையும் அரசர்களையும் அனுப்பி மீட்ட நிகழ்வைக் காண்கிறோம். அன்று கடவுள் மனிதனைத் தேடி வந்தார். தாம் படைத்த மனிதனின் மாண்பு சிதைக்கப்பட்டபோது கடவுள் பரிவுள்ளம் கொண்டவராக விளங்கினார். இத்தகைய அன்பும், இரக்கமும் நிறைந்த கடவுள் மண்ணில் மழலையாய் தோன்றியபோது யூதஇனம் அவரை அடையாளம் காணவில்லை. ஏனென்றால், அவர்களது தேடல் உண்மையான தேடலாக இல்லை. மெசியா என்பவர் அரசராகப் பிறப்பார் என்ற எண்ணமும், யூதர்களின் தலைவராக விளங்குவார் என்ற எதிர்பார்ப்பும் அவர்கள் கண்களைக் கட்டிப்போட்டது. தேடல் உண்மையானதாக விளங்கும்போது

இயற்கையும் இறைவனைக் காண உதவும் என்பதை விண்மீன் ஞானிகளுக்கு வழிகாட்டிய நிகழ்விலிருந்து நாம் அறியலாம்.

நற்செய்தியில் அரசர்கள் குழந்தை இயேசுவைக் காண வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. விவிலிய அறிஞர்களின் கூற்றுப்படி இந்த மூன்று நபர்களும் ( கஸ்பார், மெல்கியோர், பல்தசார்) ஞானிகள் அல்ல. இவர்கள் வானியல் பண்டிதர்களாகவும், நட்சத்திர நகர்வு போன்றவற்றை வைத்துக் காலங்களைக் கணிக்கக் கூடியவர்களாக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அதனால் தான் பிறந்தவர் அரசராக ஆட்சி செய்வார் என்பதன் அடையாளமாகப் பொன்னும், கடவுள் நிலையைப் பெற்றவர் என்பதன் அடையாளமாக தூபமும், மனிதனாக செயல்படுவார் என்பதை உணர்த்தும் விதமாக வெள்ளைப்போளமும் காணிக்கையாகக் கொடுக்கின்றார்கள். இம்மூவரும் புற இனத்தவர். இன்றைய திருப்பாடலில் ஆண்டவரே! எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள் என்று வருவதற்கு ஏற்றவாறு புறவினத்தைச் சார்ந்த இவர்கள் மீட்பரை அறிந்து, அடையாளம் கண்டு வணங்குவதைக் காண்கின்றோம். ஆண்டவரைக் கண்டவரின் வாழ்வுப் பாதை மாற்றம் பெறும் என்பதை உணர்த்தும் விதமாக ஞானிகள் கனவில் அறிவுறுத்தப்பட்டவர்களாக வேறு பாதையில் செல்வதாக நற்செய்தியில் வாசிக்கிறோம். எனவே, இன்றைய நாளில் நாம் அனைவரும் எதைத் தேடிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தேடல் சரியானதா? தேடிக் கண்டதை நாம் சரியாக அடையாளம் காண்கிறோமா? என்பதை சிந்திப்போம். கடவுளை நோக்கிய நமது தேடல் தொடரவும், நம் வாழ்வின் பாதை மாற்றம் பெறவும் முற்படுவோம்.





# ஆண்டவருடைய திருமுழுக்கு விழா

எசா. 55 : 1-11,
1யோவா. 5 : 1-9, மாற். 1 : 7-11

08-01-2024




பா. சேவியர்
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

மன்னிப்பதில் தாராள மனம் கொண்ட ஆண்டவரைத் தேடி வந்துள்ள அவருடைய அன்பு மக்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவரின் திருமுழுக்கு விழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று ஆண்டவருடைய திருமுழுக்கு விழாவினைக் கொண்டாடி மகிழ, திருமுழுக்கின் மேன்மையை உணர்ந்து, உலகு சார்ந்த தீய நாட்டங்களை விட்டொழித்து வாழ தாயாம் திருச்சபை நம்மை அழைத்துள்ளது.

தந்தை, மகன், தூய ஆவியார் மூவரும் ஒரே நேரத்தில் ஒன்றாய் காட்சி தந்த முதல் நிகழ்ச்சி இறைமகன் இயேசு திருமுழுக்கு பெற்ற இந்த நிகழ்ச்சிதான்.

ஆண்டவர் இயேசு மக்களில் ஒருவராகத் தன்னை இணைத்துக்கொண்டதன் அடையாளமாக, தனது பணி வாழ்வின் தொடக்கமாக, உலகின் மீட்பிற்காக கல்வாரியில் தன்னையேப் பலியாகத் தருவதன் குறியீடாக அவரின் திருமுழுக்கு அமைந்துள்ளது.

திருமுழுக்கின் வழியாக பாவங்கள் கழுவப்பட்டு, ஆண்டவரின் அன்பு மக்களாகப் புதுப்பிறப்பு எடுத்துள்ள நாம் ஒவ்வொருவரும் இறையாட்சி மதிப்பீடுகளின்படி வாழ வேண்டும் என்பதுதான் இந்நாள் நமக்கு விடுக்கின்ற அழைப்பாக இருக்கின்றது.

இவர்கள் என் அன்பார்ந்த மக்கள், இவர்களிடம் நான் பூரிப்படைகிறேன் என்று நம் வானகத் தந்தை நம்மைப் பார்த்துப் பெருமைப்படும்படி வாழவும், நமது வாழ்வு தூய ஆவியானவரின் உந்துதலுக்கு உகந்த வாழ்வாய் அமையவும் இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

வாருங்கள் இறைமக்களே, யோர் என்னும் ஊற்றும், தான் என்னும் ஊற்றும் சங்கமமாகும் யோர்தான் என்னும் இத்திருப்பலியில் பக்தியுடன் மூழ்கி நம்மேல் படிந்துள்ள பாவக் கறைகளைக் கழுவி, நம் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்வோம்.

## முதல் வாசக முன்னுரை

இறைவாக்கு நமது ஆன்மீக வாழ்வையும், அன்றாட வாழ்வையும் வளப்படுத்தும் வலுப்படுத்தும் என்பதை எடுத்துரைக்கிறது இன்றைய முதல் வாசகம். திருமுழுக்கின் வழியாக பாவ விடுதலை பெற்ற நாம் இவ்வாசகத்தின் வழியே அன்று இஸ்ரயேல் இனம் கொண்டாடிய விடுதலை விழாவில் நாமும் பங்கேற்று மகிழ்வோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நாம் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்ட விசுவாசப் பிரமாணங்கள் சொல்லளவில் நின்றுவிடக் கூடாது. அவை செயலாக்கம் பெற வேண்டும் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் விளக்குகிறது. நமது வாழ்க்கை திருமுழுக்கில் தொடங்குகிறது. அதை வளம்பெறச் செய்பவர் தூய ஆவியானவரே என்ற நம்பிக்கையுடன் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## மன்றாட்டுகள்

1) தனக்கு உவமையில்லா அன்பு இறைவா, பாவ இருளில் சிக்கித் தவிப்போரை மீட்டு உம் திருஒளிக்கு அழைத்து வரும் உன்னதப் பணிகளை ஆற்றிவரும் உம் திருஅவையின் தலைவர்கள் இவ்வுலக மக்களுக்கு உடன்படிக்கையாகவும், ஒளியாகவும் இருந்து வழிநடத்திட அவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும், ஆன்ம பலத்தையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) தாவீதுக்குக் காட்டிய மாறாத அன்பை எங்கள் மீது பொழிகின்ற அன்பு இறைவா, திருமுழுக்கு என்பது வாழ்க்கையின் மையம், அதுவே வாழ்வின் துவக்கம், அதுவே உம்மையும் எம்மையும் இணைக்கும் பாலம் என்பதை நாங்கள் உளமாற உணர்ந்து, தூய ஆவிக்கு சாட்சியமாக வாழவும், ”நீ என் அன்பார்ந்த மகன், மகள்” என்று உம்மால் அழைக்கப்படும் பேற்றினைப் பெற்றிடவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) மன்னிப்பதில் தாராள மனம் கொண்ட அன்பு இறைவா, அறிந்தும் அறியாமலும் நாங்கள் செய்த பாவங்களை மன்னியும். திருப்பலி என்னும் யோர்தானில் மூழ்கி எழுகின்ற எம் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும். நாங்கள் எங்களது சொல்லாலும் செயலாலும் சிந்தையாலும் உமக்கேற்றப் பிள்ளைகளாக வாழ்ந்து நிறை வாழ்வையும் நிலை வாழ்வையும் பெற்று மகிழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) என்றும் எப்போதும் மாறாத தந்தையே இறைவா, நாங்கள் உமது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் தான் உமது பேரன்பு அடங்கியுள்ளது என்பதை உளமாற உணர்ந்து வாழவும், உலகை வெல்லக்கூடிய உமது அருள் வாக்கை வாழ்வாக்கி வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

தரம் தாழ்ந்தவரோடு விவாதம் செய்யாதீர்கள் ஏனென்றால்,
அவர்கள் நம்மை அவர்களின் கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வார்கள்
பிறகு, முடியாதபட்சம் தாக்குவார்கள். – மார்க் ட்வெய்ன்

மௌனம் மிகப்பெரிய சக்தி,
அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ளுவதே, மிக உயர்ந்த பாடம்
– புரூஸ் லீ

யாரெல்லாம் பிறரின் விழிப்புக்குப் பாடுபட்டார்களோ
அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் (சேவல்...)

இப்பொழுது உங்களுக்கு நடக்கும் நிகழ்வு, இந்தத் தருணத்திற்காகத்தான்
இதை நிகழ்த்த, காலம் முழுவதும் காத்திருந்தது.
– மார்க்கஸ் அவ்ரெலியஸ்

மனிதர்கள் எதை வேகமாக விரும்பி ஏற்கிறார்களோ,
அதே வேகத்தோடு அதை வீசியும் எறிகிறார்கள். – ஜெயகாந்தன்

அமைதியான கடல்,
திறமையான மாலுமியை உருவாக்குவதில்லை

நல்ல நேரத்திற்காகக் காத்திருக்காதீர்கள்
இருக்கும் நேரத்தை நன்றாகப் பயன்படுத்துங்கள்

நடக்கும்போது தவறி விழுந்தாலும்
தானாக எழுந்து நிற்ப்பேனே தவிர
உன் தயவு தேவையில்லை
தூரோகியே....

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

# புறநானூறு

## இன்று நாம் நக்கீரர் எழுதிய புறநானூறு பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

நக்கீரர் அல்லது நக்கீரன் என்பவர் சங்க காலப் புலவர் ஆவார். இவர் பாண்டிய நாட்டிலுள்ள மதுரையில் வாழ்ந்தவர். இவரின் மிக குறிப்பிடத்தக்க நூல் திருமுருகாற்றுப்படை மற்றும் நெடுநல்வாடை ஆகும்.

பல்வேறு காலங்களில் வாழ்ந்த (நக்கீரர் என்ற பெயரில் பல தலைமுறைகளாக பிறந்து வாழ்ந்த) நக்கீரர் பாடல்களை தொகுத்து ஒருவர் புனையப்பட்ட கதைகள் உண்டு. பெண்ணின் கூந்தலில் இயற்கையில் வாசனை உண்டா என்ற கருத்து தொடர்பில் நக்கீரர் மதுரையில் சிவனோடு அஞ்சாது வாதிட்டவர் என்பது தொன்நம்பிக்கை. இன்றளவும் இந்த நிகழ்வு நாடகமாக நடத்தப்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றும் இவரது பெயர் குறிக்கப் பெற்றுள்ளது.

இவர் புறநானூற்றுப் பாடலில் செல்வத்துப் பயனே ஈதல் என்பதை வலியுறுத்துகிறார்.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமையோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான் கடுமாப் பார்க்குங் கல்லா வொருவர்க்கும்
உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

பொருள்:

உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்யும் ஓர் அரசனுக்கும், இரவும், பகலும் கண்ணுறங்காமல் கொடிய விலங்குகளை வேட்டையாடி வாழும் கல்வியற்ற ஒரு வேடுவனுக்கும் உண்கிற உணவு, ஒருநாழிதான். மேலாடை, கீழாடை என்கிற இரண்டு ஆடைகள் தான். இது அனைவருக்குமே பொதுவானது. ஆகவே ஒருவன் பெற்ற செல்வத்தின் பயன் என்பது பிறருக்கு

கொடுப்பதுதான்.

தான் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினால் அவன் பல நன்மைகளை இழக்க நேரிடும் என்கிறது இப்பாடல்.

விவிலியத்தில்...


செல்வருக்கும், வறியவருக்கும் பொதுவான ஒன்று உண்டு; ஏனெனில் அனைவரையும் உண்டாக்கியவர் ஆண்டவரே. (நீதிமொழிகள் 22:2)

அந்த ஏழை இறந்தார்: வான தூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார்; அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலையில் ஆபிரகாமையும், அவரது மடியில் அந்த ஏழை லாசரையும் கண்டார். (லூக்கா: 16 இறைவசனம் 19 முதல் 31 முடிய)

அந்த செல்வந்தர் எந்தத் தவறும் செய்ததாக விவிலியத்தில் கூறப்படவில்லை. அதே சமயம் அவர் எவருக்கும் உதவியும் செய்யவில்லை என்பதை அறிகிறோம். பிறருக்கு உதவுவதற்காகவே மனிதர்களுக்கு அதாவது செல்வந்தர்களுக்கு செல்வம் அளிக்கப்படுகிறது. அந்த செல்வத்தைக் கொண்டு நன்மையானதை பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் பாதாளம் தான் கிட்டும் என்பதைக் கடவுள் இதன் வழியாக எச்சரிக்கிறார்.

இயேசுவுக்கே மகிமை

லீமா விக்டோரியா,தமிழ் ஆசிரியை.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

குறள் 77

என்பிலதனைவெயில்போலக் காயுமே
அன்பிலதனைஅறம்



குறள் விளக்கம்

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்

சிந்தனை

ஜென் துறவி ஒருவரிடம் பெண்மணி ஒருத்தி வந்தாள். எனக்குக் கல்யாணம் ஆகி பத்து ஆண்டுகள் ஆகின்றன. வாழ்க்கையே நரகமாகிவிட்டது. இனியும் என்னால் அவரோடு சேர்ந்து வாழமுடியாது. நீங்கள் தான் ஏதேனும் நல்வழி கூற வேண்டும் என்றாள். அவளிடம் ஒரு ரோஜா செடியைக் கொடுத்து, இதை உன்னிடம் தந்தால் என்ன செய்வாய்? என்று கேட்டார் துறவி. சுவாமி, நாள்தோறும் செடிக்குத் தண்ணீர் ஊற்றுவேன். மாதத்திற்கு ஒருமுறை பழைய மண்ணை நீக்கிவிட்டு புது மண் போடுவேன். அடிக்கடி உரமிடுவேன். வெயில்படுகின்ற இடத்தில் இந்தப் பூந்தொட்டியை வைப்பேன். மிகக் கவனமாகப் பராமரிப்பேன் என்றாள். பெண்ணே! பூசெடி ஒன்றிடம் நீ காட்டும் அன்பில் சிறிதளவேனும் உன் கணவனின் விஷயத்தில் காட்டி இருந்தாலும் பரவாயில்;லை. அப்படிக் காட்டியதுண்டா? என்று கேட்டார். அந்தப் பெண் தலைகுனிந்தபடி நின்றாள்.

அன்பு இல்லாத வாழ்க்கை அழிவை நோக்கிச் செல்கின்றது. அன்பு என்ற உரமிட்டு அதனை அடிக்கடி வளப்படுத்த வேண்டும். இக்குறளில் ஓர் அருமையான நயத்தைப் பார்க்கிறோம். அன்பில்லாத மனிதர்களை வள்ளுவர் மனிதனாகப் பார்க்கவில்லை. புழுப்பூச்சிக்கு அவர்கள் சமம் என்கிறார். எனவே அத்தகையவர்களை அறம் கொன்றுவிடும் என்கிறார்.

வேதாகமத்தில் லூக்கா 16ம் அதிகாரத்தில் பணக்காரனும் ஏழை இலாசரும் உவமையில் அந்தப் பணக்காரன் லாசருக்கு எந்த அன்பும் இரக்கமும் காட்டவில்லை. எனவே அவனுடைய கடைசி நாட்கள் நெருப்பில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. பணக்காரனைக் கொன்றது எது? அவனை நெருப்புக்கு அனுப்பியது அறம். இதுபோன்று இயேசுவின் குழந்தைப் பருவத்தில் இரண்டு வயதுக்கு உட்பட்டக் குழந்தைகளைக் கொன்ற ஏரோது அரசனும் புழுத்துச் செத்தான் என்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது. எனவே அன்பில்லாதவர்களை அறம் கொல்லும் என்பது உறுதியாகிறது.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm